## சக்தி பௌண்டேஷன் - தமிழ் CAC வகுப்பு
## Uni5 பக்த விஜயம் - 26. ஸ்ரீசாந்தோபா

மஹாராஜ் துக்கா ராமின் தீவிர சிஷ்யர்.அவரது வாழ்க்கை வரலாற்றை முன் உதாரணமாக எடுத்துக் கொண்டு வீடு பேற்றினைப் பெற்றனர் இவர். பிறரது வாழ்க்கையை அறிந்து தெளிந்து அதை நம்முடன் பிணைத்துக் கொள்வதன் மூலம் நாம் நம்மை அவர் போல உயர்த்திக் கொள்ள முடியும்.சந்யாசம் என்பது உணர்ச்சிப் பூர்வமானது அல்ல!

லௌகீக வாழ்க்கையின் முன்னேற்றங்களைப் பிறர் வாழ்க்கை மூலம் கண்டு அதைத் தானும் பெற பெருமுயற்சியும் உழைப்பும் கொண்டு மக்கள் வாழ்கிறார்கள்.ஆனால் ஆன்மீகப் பாதையில் பிறரைப் போல் வாழ வரவர யாரும் விரும்புவதில்லை.

சாந்தோபா பக்த துக்காராமின் வரலாற்றை உணர்ந்து வைராக்யம் மிகுந்து ஒரே நாளில் தன் இல்லறத்தை விடுத்து பண்டரீபுரத்துக்கு அருகில் உள்ள ஒரு வனத்தில் சென்று வாழ ஆரம்பித்தார். இதை ஏற்றுக் கொள்ள முடியாத அவரது தாய் மருமகள் யசோதாவை அழைத்து, மகனை மீண்டும் வீட்டுக்கு அழைத்து வரும்படி வேண்டினார்.

**மனம் மாறிய மனைவி**

மாமியார் கூறிய அறிவுரைகளைத் தன் கணவருக்கு எடுத்துக் கூறுகிறார் யசோதா.ஆனால் அவை அனைத்தும் தன்னுள் இருக்கும் பற்றுக்களின் வெளிப்பாடே என்று உணர்ந்த சாந்தோபா அமைதியாக மனைவிக்குத் துக்கா ராமின் வாழ்க்கையை விரிவாக எடுத்துக் கூறி, அவரது மனைவி செய்த தவறுகளை யோசிக்க வைத்தார்.துக்கா ராமைப் போல் ஒரு தூய அன்பர் கணவராகக் கிடைத்தும் அவரது மனைவிக்கு நற்கதிக்குச் செல்லும் வழியை அறியாமை காட்டவில்லை என்பதை யசோதா உணர்ந்து, தன் கணவனின் பந்தமே உலக பந்தத்தை அறுக்க என்று உணர்கிறார்.

**ஸ்ரீதுக்காராம் சரிதப் பாராயணம்**

ஆன்மீக வைராக்ய நெறியில் தம்பதியினர் ஒன்றுபட வேறு சுகமும் வேண்டுமோ? தம்பதியினரின் புகழ் பண்டரீபுரத்தில் பரவியது.மிக இளம் வயதில் லௌகீக சுகங்களை ஒதுக்கி வாழும் பாகவதத் தம்பதிகளை தரிசிக்கவும் அவர்களுக்கு பிக்ஷை அளிக்கவும் மக்கள் கூடினர்.பஜனைகள் மூலமும் நாமாவளி மூலமும் மக்களுக்கு ஸ்ரீதுக்காராமின் வாழ்க்கையை ராமாயணம் போல பாராயணம் செய்து

வாழ்ந்தனர் இவர்கள்.

**அன்புத் தங்கையின் அடை**

அன்று வனத்துக்கு அருகில் உள்ள கிராமத்தில் பிக்ஷைக்கு எழுந்தருளினார் யசோதா. அவ்வூரில் அவரது நாத்தனார் வாழ்ந்தார்.அண்ணியை வீட்டுக்குள் அழைத்து, பாகவத மரியாதை செய்தார்.அண்ணனுக்குப் பிடித்த இனிய நெய் அடைகளைச் செய்து கட்டி அனுப்பினார்.

வழியில் மழை பெய்து ஆற்றில் வெள்ளம் ஏற்பட, கணவனின் பசியாற்ற முடியாமல் தான் தவிக்கும் நிலையில் இருக்க, பாண்டுரங்கனே ஒரு படகில் வந்து அம்மையாரைக் கரை சேர்த்து மறைந்தான்.இதை எண்ணி எண்ணி மனம் உருகி அழுது கைகூப்பிக் கொண்டு வந்ததைப் பார்த்து சாந்தோபா தனக்கு அத்தரிசனம் கிடைக்கவில்லையே என்று ஏங்கி ஏங்கி உணவே சாப்பிடாமல் மனதில் எண்ணங்களுக்குச் சமாதி கட்டிக் கிடக்கும் நாளில் இறைவன் அவர் வேண்டிய முறையில் காட்சி அளித்தான்.

**முரடனை மாற்றிய தம்பதியினர்**

பண்டரீபுரத்தில் ஒரு கணவன் மிகவும் முரடன்.அவன் எப்போதும் குறைகள் கூறி மிகவும் தகாத வார்த்தைகள் சொல்லி, மனைவியை அடிப்பதும் கண்டிப்பதுமாக இருப்பான்.மனைவி ஏதாவது சொன்னால், "என்னை அடக்கினால் உன்னை விட்டு விட்டு அதோ பார் சாந்தோபா போல் வீட்டை விட்டு ஓடி விடுவேன்!" என்பான்.

இதை உணர்ந்த சாந்தோபா அவனைத் தன்னிடம் வரும்படி பணித்தார்.இவனும் சென்றான்.பசிக்கு வேப்பம் காய்களையும் உடைந்த சுரைக்காய் ஓட்டில் தண்ணீரும் தந்து சதா அதை உண்டு பாண்டுரங்க ஸ்மரணை செய்யுமாறு கூறினார். அவரது கால்களில் விழுந்து தன்னால் அவை முடியாது என்று இவன் கூற, ***"ஐயா! வைராக்ய பக்தியால் சந்யாசம் கைகூடுமே தவிர, வெற்றுக் கோபத்தால் அல்ல. உன்னை மதித்து, பணிகள் செய்கள் பல செய்து, அறுசுவை உண்டி அளிக்கும் உன் மனைவியை முதலில் அன்புடன் மதி, அதுவே ஈஸ்வர தரிசனம் பெற முதல் படி!"*** என்று கூறிட அவனும் மனம் மாறி இனிய இல்லறம் மேற்கொண்டான்.

தம்பதியினரின் தூய சந்யாசமும், பஜனைகளும், துக்கா ராம் சரிதப் பாராயணமும் பண்டரீ யாத்ரீகர்களுக்கு மிகவும் உறுதுணையாயின. பல காலம் வைராக்ய பக்தியில் லயித்து இவர்கள் இறை நிழல் சேர்ந்தனர்.

ஹரி ஓம்!